<u>முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

முன்னிலை - திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

2026 ம் வருடம் மார்ச் மாதம் 16 ம்நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்-பங்குனி திங்கள் 2 ம்நாள்)

<u>இடைநிலை மனு எண்.12/2026</u>
அசல் வழக்கு எண்.120/2018

பி.வெங்கடேசன் .. மனுதாரர் / 2 ம் பிரதிவாதி

// எதிர் //

1. ஆர்.சி.சாவித்திரி
2. மனநிலை பாதிக்கப்பட்டவர் மற்றும் காதுகேளாத என்.ராஜம்மாள் (இறந்துவிட்டார்)
3. கிளை மேலாளர், DCB வங்கி,
4. சார்பதிவாளர் அவர்கள்
   ஈரோடு.

.. எதிர்மனுதாரர்கள்/
வாதி/1,3 மற்றும் 4
பிரதிவாதிகள்

16.02.2026 ம் தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 16, விதி 6 மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, ஈரோடு, சக்தி ரோடு கிளை, HDFC வங்கி, மேலாளரிடமிருந்து இம்மனுவில் பட்டியலிடப்பட்ட ஆவணத்தை இந்நீதிமன்றத்திற்கு தருவிக்க வேண்டுமென்று கோருகிறார்.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 10.03.2026 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.என்.சரவணன், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.டீ.மணிவேல், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.ஆர்.கே.கோபாலகிருஷ்ணன், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.எஸ்.வி.வாசுதேவன்,அரசு, வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 2 ம்

எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், இருதரப்பு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

உத்தரவு

ஈரோடு, சக்தி ரோடு கிளை, HDFC வங்கி, மேலாளரிடமிருந்து இம்மனுவில் பட்டியலிடப்பட்ட ஆவணத்தை இந்நீதிமன்றத்திற்கு தருவிக்க வேண்டுமென்று கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு உரையின் சுருக்கம்:

மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவார். தாவா சொத்துகளைப் பொறுத்து வாதிக்கு எந்த விதமான முகாந்திரமும், உரிமையும் இல்லாத நிலையில், அச்சொத்துகளில் தனக்கு உண்டான பாகத்தினை பிரிவினை செய்து தரக் கோரியும், வழக்கு சொத்தின் உரிமையாளரும், பூரண பாத்தியஸ்தருமான இம்மனுதாரருக்கு எதிராக உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி இந்த அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்துகள் ஆதியில் ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாருக்கு தனிமையில் பாத்தியப்பட்ட சுயார்ஜிதமாக சொத்துகளாகும். அவருக்கும், 1ம் பிரதிவாதியான ராஜம்மாளுக்கும் நடைபெற்ற திருமண பந்தத்தின் வாயிலாக அவர்களுக்கு வாரிசுகள் ஏற்படவில்லை. ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாரின் சகோதரரான ஓ.ஏ.கே.மாரியப்பனீ வாரிசு 1ம் எதிர்மனுதாரர் ஆவார். அவர் தனது பிராதிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிட்டுள்ளது போல ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியார் மற்றும் ராஜம்மாள் ஆகியோர்களது சுவீகார புத்திரியோ அல்லது வளர்ப்பு மகளோ இல்லை. மேற்படியார்கள் எந்த ஒரு காலகட்டத்திலும் 1ம் எதிர்மனுதாரர்/வாதியினை சுவீகார புத்திரியாகவோ அல்லது தங்களது வளர்ப்பு மகளாகவோ பாவிக்கவில்லை. அதற்கு எந்த ஒரு ஆவண சாட்சியங்களும், தனி நபர் சாட்சியங்களும் இல்லை.

3. 1ம் எதிர்மனுதாரர் /வாதி தரப்பில் இம்மனுதார்/1ம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்தபொழுது இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி தனது ஆயுட்காலத்தில் இம்மனுதாரருக்கு ஆதரவாக, அவருக்கு

பாத்தியப்பட்ட சொத்துகளைப் பொறுத்து கடந்த 09.01.2012 ம் தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டதாகச் சொல்லும் சமயத்தில் அவருக்கு 85 வயதிற்கு மேல் ஆன நிலையில் அந்த ஆவணம் அவரால் எழுதி வைக்கப்படவில்லை எனவும், அதில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகையானது அவருடையது அல்ல என்ற வகையில் ஓர் வாதமானதை எழுப்பியுள்ள நிலையில், மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகையானது அவருடையது தான் என நிரூபணம் செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும், அந்த ஆவணத்தின் வாயிலாக சொத்துகளை இம்மனுதாரர் அடைந்துள்ள நிலையில் தனக்கு அதிகப்படியாக உள்ளது எனவே மேற்படி 09.01.2012 ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட கையெழுத்து மற்றும் கைரேகையினை, ஒப்புக் கொள்ளப்படும் ஆவணங்களான அதாவது மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்ட சமகால ஆவணங்களான காலஞ்சென்ற 1 ம் பிரதிவாதி ராஜம்மாள், வங்கிக் கணக்கு வைத்திருந்த, செண்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, பிரதான கிளை, பன்னீர்செல்வம் பார்க், வங்கி கணக்கு எண்:1242800254-ல் இருந்து தருவிக்கப்படும் ஆவணங்களில் உள்ள கையெழுத்து, கைரேகைகளுடன் ஒப்பீடு செய்து அறிக்கை பெற வேண்டி தனியாக மற்றொரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுதாரர் மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ஓர் ஆவண விபரமாக காட்டி HDFC வங்கி, சக்திரோடு கிளை,ஈரோட்டில் கடன் கணக்கு எண்.802030248 ன்படி பத்திர வைப்பு அடமானமாக வைத்து கடன் பெற்றுள்ளார். மேற்படி கடன் தொகைகள் மனுதாரரால் எவ்விதமான நிலுவையுமின்றி முறையாக மாதா மாதம் செலுத்தப்பட்டு வருகிறது. எனவே மேற்படி ஆவணத்தினை மேற்படி வங்கியிலிருந்து இந்நீதிமன்றத்திற்கு தருவிக்க உத்தரவிட வேண்டியது அவசியமானதும், நியாயமானதும் ஆகும். புகைப்பட ஆவணத்தையோ, பதிவு சான்று நகல் பெற்ற ஆவணத்தினையோ வைத்து தடய அறிவியல் துறையினால் ஒப்பீடு செய்து அறிக்கை வழங்குவது என்பது சட்டப்படி இயலாது ஒன்றாகும். எனவே இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

4. 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, இ.ம.எண்.11/2026 ல் இந்த எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையையே இம்மனு எதிருரையாக ஏற்க வேண்டுமென்று கோரப்பட்டு அந்த குறிப்பாணை பதிவு செய்யப்பட்டுள்ளதில், இ.ம.எண்.11/2026 ல் தாக்கல் செய்த எதிர்உரையின் சுருக்கம்:

இந்த மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். இந்த எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்படுவது யாதெனில், மனு பாரா 3 ல் சொல்லியுள்ள சங்கதிகளில், தாவா சொத்தை பொறுத்து வாதிக்கு எந்தவிதமான முகாந்திரமும், உரிமையும் இல்லை என்று கூறுவது பொய்யான சங்கதி ஆகும். அதே போல் மனுதாரர் தாவா சொத்தின் உரிமையாளர் என்பதும், மேற்படி சொத்திற்கு பூரண பாத்தியஸ்தருமாக சொல்வதும் தவறான சங்கதிகள் ஆகும். மனு பாரா 5 ல் ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியார் மற்றும் ராஜம்மாள் ஆகியோர்களது சுவீகார புத்திரியோ அல்லது வளர்ப்பு மகளோ இல்லை என்பதும், மேற்படியார்கள் எந்த ஒரு காலகட்டத்திலும் இந்த எதிர்மனுதாரரை சுவீகார புத்திரியாகவோ அல்லது தங்களது வளர்ப்பு மகளாகவோ பாவிக்கவில்லை என்று சொல்வது பொய்யான கூற்றாகும். 09.01.2012 ம் தேதி ஈரோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.124/2012 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள கையெழுத்தும், 1 ம் பிரதிவாதி ராஜம்மாள், அவரின் வங்கி கணக்கு வைத்திருந்த சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, வங்கி கணக்கு எண்.1242800254 ல் உள்ள அனைத்து ஆவணங்களுடன் கையெழுத்து ஒப்பிட்டு பார்த்தால் தான் இவ்வழக்கின் உண்மை தன்மை தெரிய வரும். ஆகவே மேற்படி 1 ம் பிரதிவாதியின் கையெழுத்தை ஒப்பிட்டு பார்ப்பதற்கு இந்த எதிர்மனுதாரர் தயாராக இருக்கிறார்.

5. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

6. பிரச்சினைக்குத் தீர்வு:-

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு கோப்பு

பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் காலம் சென்ற ராஜம்மாள் மனுதாரருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்திருப்பதாகவும், அதை 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மறுப்பதாகவும், மேற்படி ஆவணத்தில் கையெழுத்து மற்றும் கைரேகையானது ராஜம்மாளுடையது தான் என நிரூபணம் செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும், அந்த ஆவணத்தின் வாயிலாக சொத்துகளை இம்மனுதாரர் அடைந்துள்ள நிலையில் தனக்கு அதிகப்படியாக உள்ளதாகவும், இம்மனுதாரர் மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ஓர் ஆவண விபரமாக காட்டி HDFC வங்கி, சக்திரோடு கிளை,ஈரோட்டில் கடன் கணக்கு எண்.802030248 ன்படி பத்திர வைப்பு அடமானமாக வைத்து கடன் பெற்றுள்ளதாகவும், மேற்படி கடன் தொகைகள் மனுதாரரால் எவ்விதமான நிலுவையுமின்றி முறையாக மாதா மாதம் செலுத்தப்பட்டு வருவதாகவும், அதனால் மேற்படி ஆவணத்தினை மேற்படி வங்கியிலிருந்து இந்நீதிமன்றத்திற்கு தருவிக்க உத்தரவிட வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது.

7. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ராஜம்மாளின் கையெழுத்தை ஒப்பீடு செய்ய ஆட்சேபணை இல்லை என்றும், 1ம் எதிர்மனுதாரரும் தயாராக இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. எனவே பிரச்சினைக்குரிய தானசெட்டில்மெண்ட் பத்திரமும், இறந்துபோன ராஜம்மாளின் கையெழுத்து மற்றும் கைரேகை உள்ள ஒப்புக் கொள்ளப்பட்ட வங்கி ஆவணமும் ஒப்பீடு செய்ய தேவைப்படுவதாலும், இறந்துபோன ராஜம்மாள் மனுதாரருக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் உண்மையானதா என்பது குறித்து மனுதாரருக்கு நிரூபிக்க வேண்டிய அவசியம் என்பதாலும் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**இறுதியாக**, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில்

சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ம் வருடம் மார்ச் மாதம் 16 ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S EZHIL Digitally signed by S EZHIL Date: 2026.03.16 19:41:35 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>
(..இருதரப்பில் தாக்கல் இல்லை ..)

S EZHIL Digitally signed by S EZHIL Date: 2026.03.16 19:41:39 +0530

மு.கூ.மா.நீ., ஈரோடு.

அசல்/வரைவு உத்தரவு
இ.ம.எண்.12/2026
அ.வ.எண்.120/2018
நாள் 16.03.2026
மு..கூ.மா.நீ.ம., ஈரோடு.